1981 எப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குடிநீர் சம்பந்தப் பட்ட கேள்வி ; விவசாயத்திலே வராது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்த வறட்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட நிதியில் ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதி சேராத காரணத்தால், அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்குச் சிரமப்பட்டுக் கொண் டிருப்பதால் ஆழ் கிணறுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்படி தொகுதியிலே வறண்டு கிடக்கும் திறந்த வெளிக் கிணறுகளுக்குப் பதிலாக ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்து செயற்குறிப்பு ஏதும் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் சம்பந்தப்பட்ட ஊராட்சி யினரிடமிருந்து முன் வைப்புத் தொகை திட்டத்தின் கீழ் மேற் கூறிய பகுதிகளில் வறண்டு போன திறந்தவெளிக் கிணறுகளுக்குப் பதில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் படி வாரியத்திடம் தொகை செலுத்த முன் வந்தால் இது குறித்து குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்யும்.

இந்திய மருந்து விற்பனையாளர்கள் சங்கம் அரசிடம் அளித்துள்ள கோரிக்கை.

*வினா எண் 804— திரு. கே. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மருந்து விற்பனை மற்றும் பல பொருட்களின் விற்பனை ஏஜண்டுகளை தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் என்று நிர்ணயிக்கும் திருத்தத்தைக் கொண்டு வர அரசுக்கு உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர உள்ளது ?

(இ) இது குறித்து இந்திய மருந்து விற்பனையாளர்களின் சங்கம் அரசுக்குக் கோரிக்கை சமர்ப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மருந்து மக்களுக்கு மிகவும் தேவையான முக்கியமான பொருளாக இருப்பதால் அதை விற்கக்கூடிய ஏஜண்டுகள் ஏராளமான பேர்கள் கம்பெனி களின் சார்பிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான சர்வீஸ் கண்டிஷனும் அவர்களுக்கு இல்லாமல் படுமோசமான நிலையில் இருப்பதை அமைச்சரவர் கள் அறிவார்களா? அது ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் உள்ள விஷயங்கள் என்னென்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிச் சட்டத்திருத்தம் கொண்டு வருவதாக மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இருப்பினும், தொழிற்சங்கம் கோரிக்கை வைத்ததன் பேரில், வற்பனை மேம்பாட்டுத் தொழிலாளர்கட்கும் பொருந்துமாறு மேற்கு வங்க அரசு, 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2 (S)ல் திருத்தம் செய்துள்ளது. அதைப்போல இந்த அரசும் தொழிலாளர் சட்டக் குழுவின் ஆலோசனை பெற்று, தொழிற் தகராறு சட்டத் திருத்தம் கொண்டுவருவது பற்றி பரிசீலிக்கலாம் என்று தொழிலாளர் துறை ஆணையர் ஆலோசனை கூறியுள்ளார். மேற்கு வங்க அரசின் சட்டத் திருத்தத்தின் நகல் பெறப்பட்டுள்ளது. இதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிக்க நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் சட்டத் திருத்தம் கொண்டுவந்து அதை அமலுக்குக்கொண்டு வரும் வரையில் அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கத் தொழி லாளர் நல இலாகா மூலம் அவர்கள் நடவடிக்கை எடுத்தால், அணுகினால் அதற்குரிய நடவடிக்கைகளைத் தொழி லாளர் நல இலாகா எடுத்துக்கொள்ளுமா? எந்த முறையில் அவர்கள் அணுக வேண்டுமென்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதில் சிக்கல் இருக்கின்ற காரணத் தினால், இந்த இலாக்கா வெற்றிபெறாத காரணத்தினால், மேற்கு வங்க அரசு இதற்குச் சட்டம் திருத்தம் கொண்டு வந் திருக்கிறது. அந்தத் திருத்தம் Section 2 (S)ல் After the word "technical" tne words "sales promotion" shall be inserted. அந்த

1981 ஏப்ரல் 20]

செக்ஷனில் Workman means "any person including an apprentice employed in any industry to do any skilled or unskilled manual supervisory, technical"

என்பதுதன் மேற்கு வங்க அரசு எடுத்த முயற்சியைத் தமிழக அரசும் எடுக்க வேண்டுமென்பதற்காக இந்தப் பில்லை வரவழைத்திருக்கிறோம். மத்திய அரசு கொண்டு வருவதில் தாமதம் இருந்தால் மாநில அரசு விரைவாகவே செயல்படும்.

திரு க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து விற்பனை போன்ற தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைக் காரணம் ஏதுமின்றி நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு விடுவித்து விடுவதால் அவர்கள் அரசுத் துறையிலே வேலை வாய்ப்பைப் பெற முடியாத அளவிற்கு அதற்கான வயதைத் தாண்டிவிடுகிறார்கள். ஆகவே, இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் இருந்தால் அவர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் அமைச்சரவர்கள் கொண்டு வர உத்தேசித்திருக்கின்ற சட்டத் திருத்தத்தை (retrospective effect) கொடுத்து கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்துறையுடன் ஆலோசித்து ஆவன செய்யப்படும்.

ஊத்துக்குளி ஒன்றியப் பகுதியில் பழுதடைந்துள்ள மின் இறைப்பான்கள்.

*வினா எண் 805.—திரு தி. க. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்தில் பழுதடைந்து குடிநீர் வாரியத்திற்குக் கொண்டு வந்த மின் இணைப்பு மேட்டார்கள் எத்தனை?

(ஆ) அவை எத்தனை மாதங்களாக, நாட்களாக பழுது பாக்கப்படாமல் இருக்கின்றன, ஏன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) 33 மின் இறைப்பான்கள். அவற்றில் 24 மின் இறைப்பான்களில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டன. மீதமுள்ள 9 இறைப்பான்களில் பழுதுகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இவை விரைவில் முடியும்.